சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக வாழப்பாடி தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் முன்பு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து இனிப்புகளை மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் முரா .கருணாநிதி, மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மலர்விழி ராஜா, தமிழ்ச்செல்வன், சந்திரமோகன், ஒன்றிய செயலாளர்கள் விஜயகுமார், சக்கரவர்த்தி, சிவராமன், மாதேஸ்வரன், வரதராஜன், சங்கர் ,கோபால், முனைவர் சீனிவாசன், செல்வம் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

### அமிர்த. விஜயகுமார் முன்னிலை!

# செம்பனார்கோயில் மத்திய ஒன்றியத்தில் வாக்காளர்களுக்கு நன்றி!

## நிவேதா எம்.முருகன் தெரிவித்தார்!

*மயிலாடுதுறை, ஜூன் 4 -*

மயிலாடுதுறை மாவட்டம்,பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் நிவேதா எம். முருகன் தனது பூம்புகார் தொகுதி செம்பனார்கோயில் மத்திய ஒன்றியத்தில் வாக்காளர்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார்.

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க செம்பனார்கோயில் மத்திய ஒன்றியத்தில் காழியப்பநல்லூர், டி.மணல்மேடு, கிள்ளைபூர், திருக்கடையூர், பி.பி.நல்லூர், மாணிக்கம்பங்கு ஆகிய ஊராட்சிகளில் வாக்காளர்களுக்கு செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய கழக செயலாளர் அமிர்த.விஜயகுமார் முன்னிலையில் வாக்காளர்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார்

வழிநெடுகிலும் திரண்டிருந்த பொதுமக்கள், பெண்கள் வழி நெடுகிலும் பட்டாசு வெடித்தும், மாலை மற்றும் சால்வை அணிவித்தும், ஆரத்தி எடுத்தும் உற்சாகமான வரவேற்பு அளித்தனர்.

இந்த நன்றி தெரிவிப்பு நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ வின்சென்ட், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ். கே.முத்துராஜா, மாவட்ட இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் எழில் நம்பி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பாஸ்கர், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் இரா.செந்தில், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஜெயச்சந்திரன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் திருமூர்த்தி, முன்னாள் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கேசவன்,ஒன்றிய மகளிர் அணி துணை அமைப்பாளர் சியாமளா பாஸ்கர்,

மாவட்டப் பிரதிநிதி தட்சிணாமூர்த்தி ஒன்றிய துணை செயலாளர் சங்கர் கணேசன் ஒன்றிய பொருளாளர் கருணாநிதி தகவல் தொழில்நுட்ப அணி கபிலன், பரத், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சிவராஜ், ஒன்றிய இளைஞர் அணி மாரியப்பன், ஒன்றிய வர்த்தக அணி அமைப்பாளர் உதயகுமார், ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் ஜெயச்சந்திரன், ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் மகேந்திரன், துணை அமைப்பாளர் சுப்பிரமணியன், ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் அனிதா ஸ்டாலின், ஒன்றிய இளைஞரணி ரத்தினகுமார்,

ஒன்றிய கலை இலக்கிய துணை அமைப்பாளர் மதியழகன்,; சங்கர், வர்த்தகர் அணி வேலு முருகேசன் அஜய் ஜெயக்குமார்ஜெயச்சந்திரன் உதயகுமார், ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர்கள் எஸ் தினேஷ்குமார், கே. பிரித்தி விராஜ் மற்றும் சங்கர், அஜய்,முருகேசன்

மற்றும் கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்டம், கணியூர் ஊராட்சியில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு கூலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் சிபி.கே.செந்தில்குமார் தலைமையில் கே.எம்.நாகராஜ், மயூரா சுப்பிரமணியன், மு.க.முத்து, பீடம்பள்ளி சுரேஷ், ரமேஷ் பாலன் முன்னிலையில் மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி. மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் மன்னவன் அன்பரசு வேலுச்சாமி , விஸ்வநாதன், சசிகுமார், பாலு, ஜெகதீஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர், செம்மொழிக் காவலர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு பீளமேடு அண்ணா நகரில் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாநில தீர்மானக் குழு செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் மலர்தூவி மரியாதை செலுத்தி, கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிரமணியம், பொதுக்குழு உறுப்பினர் இரா.மணிகண்டன், கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், மாமன்ற முன்னாள் உறுப்பினர் என்.கேசவன், சி.டி.சி.நடராஜ், பி.மனோகர், ஆட்டோ சசி, ஆட்டோ வாசு உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், குடிமங்கலம் மேற்கு ஒன்றியம், கொங்கல் நகரம் ஊராட்சியில் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி, பொது மக்களுக்கு காலை உணவினை குடிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அடிவள்ளி எம்.எஸ்.முரளி தலைமையில் உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி.ஆலோசனைப்படி தருமபுரி கிழக்கு மாவட்டம் இண்டூரில் நல்லம்பள்ளி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் என்.பி.பெரியண்ணன் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து பொதுமக்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.உடன் எச்சனஹள்ளி சண்முகம்,வீரமணி, பி.சி.சின்ராஜ், தங்கராஜ், செல்ல பெருமாள், சரவணன், ம.வெங்கடராமன், கண்ணன் மூர்த்தி, சிவகுரு, சிவமூர்த்தி, சூர்யா, இளங்கவி, ஆனந்தன், மாரியப்பன், எல்லப்பன், தேமுதிக பெரியசாமி, ராமன், சக்திசிவம், உள்ளிட்ட ஏராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

### த.வெ.க. ஆட்சியில் தொடரும் கொலைச் சம்பவங்கள்!

# கோவையில் மாயமான பைனான்சியர் எரித்து கொடூரக் கொலை!

## கத்திக்குத்து காயத்துடன் சாக்கடையில் உடல் மீட்பு!

*கோவை, ஜூன் 4 -*

கோவையில் மாயமான பைனான்சியர் எரித்து கொடூரமாக கொலை செய்யப்பட்டார். கத்திக்குத்து காயத்துடன் நேற்று முன்தினம் காலை சாக்கடையில் உடலை மீட்டு காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை ஆர்.எஸ்.புரம், பட்டு நூல்கார சந்து பகுதியைச் சேர்ந்தவர் அபு தாகிர் பாஷா (27). இவர், ஆக்டிங் டிரைவராக வேலை பார்த்து வந்தார். மேலும், தனது நண்பருடன் சேர்ந்து பைனான்ஸ் தொழிலும் செய்து வந்தார். கடந்த 29ம் தேதி மாலை அபுதாகிர் பாஷா வழக்கம்போல வீட்டை விட்டு வெளியே சென்றார். அதன்பின், இரவு 8 மணியளவில் அவர் வீடு திரும்பி உள்ளார். ஆனால் வீட்டிற்குள் வராமல் அபு தாகிர் பாஷா வீட்டின் அருகே நின்று போனில் பேசி கொண்டு இருந்தார்.

அதனை அவரது தாய் பாத்திமா (45) பார்த்துள்ளார். அதன்பின், நீண்ட நேரமாகியும் அவர் வீட்டிற்கு வரவில்லை. இதனால், பதற்றமடைந்த குடும்பத்தினர், அவரது அலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டனர். ஆனால், அவரது அலைபேசி சுவிட்ச் ஆப் செய்யப்பட்டு இருந்தது. இதனால், அதிர்ச்சியடைந்த தாய் பாத்திமா தனது மகனை பல இடங்களில் தேடிப் பார்த்தார்.

எந்தத் தகவலும் கிடைக்காததால் அவர் ஆர்.எஸ்.புரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில், காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து, மாயமான அபு தாகிர் பாஷாவை தீவிரமாக தேடி வந்தனர். இந்த நிலையில், நேற்று முன்தினம் அதிகாலை சிரியன் சர்ச் ரோடு பகுதியில் உள்ள சாக்கடையில் ஆண் சடலம் ஒன்று பாதி எரிந்த நிலையில் கிடந்தது.

இதைக்கண்டு அதிர்ச்சி அடைந்த பொதுமக்கள் இதுகுறித்து காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். ஆர்.எஸ்.புரம் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று உடலை கைப்பற்றி விசாரணை நடத்தினர். இதில், அது மாயமான அபு தாகிர் பாஷா என்பது தெரிவந்தது.

மேலும், அவரது வயிற்றில் கத்திக்குத்து காயமும் இருந்தது. முதற்கட்ட விசாரணையில், அபு தாகிர் பாஷாவை கத்தியால் குத்தி கொலை செய்து, எரித்தது தெரியவந்தது. இதையடுத்து காவல்துறையினர் அபு தாகிர் பாஷா உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதைத்தொடர்ந்து மாயம் என பதிவு செய்திருந்த வழக்கை காவல்துறையினர் கொலை வழக்காக மாற்றி அபு தாகிர் பாஷாவை கொலை செய்தது யார்? பணம் கொடுக்கல், வாங்கல் பிரச்சினையில் கொலை செய்யப்பட்டாரா? அல்லது வேறு ஏதாவது காரணமா? என பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி கொலையாளிகளை தேடி வருகின்றனர். புதிதாக அரசு அமைந்த 15 நாட்களுக்குள் கோவையில் அடுத்தடுத்து கொலைகள் அரங்கேறி வருவதால் பொது மக்களிடையே அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

### த.வெ.க. ஆட்சியில் கிராம ஊராட்சி செயலாளர்களுக்கு

# தவணை முறையில் சம்பளம் பட்டுவாடா - வட்டார வளர்ச்சி அதிகாரி அறிவிப்பு!

## காரசார வாக்குவாதம் – பரபரப்பு!

*கோவை, ஜூன் 4 -*

த.வெ.க. ஆட்சியில் கோவை மாவட்டம், சூலூர் ஒன்றியம், சுல்தான் பேட்டை ஊராட்சியில் உள்ள 20 கிராம ஊராட்சிகளின் செயலாளர் மற்றும் அலுவலக உதவியாளர், வாட்டர் மேன் ஆகியோருக்கு தவணை முறையில் தான் சம்பளம் வழங்க முடியும் என வட்டார வளர்ச்சி அதிகாரி (BDO) தெரிவித்துள்ளார். இதனால் ஊராட்சி செயலாளர்கள் வட்டார வளர்ச்சி அலுவலரை முற்றுகையிட்டு கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

கடந்த காலங்களில் கிராம ஊராட்சியில் உள்ள செயலாளர் உள்ளிட்ட அலுவலக பணியாளர்களுக்கு மாதம்தோறும் 1ம் தேதி சம்பளம் தருவது வழக்கம். 1ம் தேதி விடுமுறை என்றால் அதற்கு முந்தைய நாளே இதுவரை சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது 2 பஞ்சாயத்துகளுக்கு மட்டுமே சம்பளம் தர முடியும் என வட்டார வளர்ச்சி அலுவலர் கலாராணி தெரிவித்துள்ளார். இது ஊராட்சி செயலர்கள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதனால் ஊராட்சிகளில் பணிகள் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஊராட்சி செயலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக ஊராட்சி செயலாளர்கள் கூறுகையில், சுல்தான் பேட்டை ஊராட்சியில் 20 கிராம பஞ்சாயத்துகள் உள்ளன. மாதம் முதல் தேதி சம்பளம் வழங்கி வந்த நிலையில் தேர்தல் சமயத்தில் புதிதாக வந்த வட்டார வளர்ச்சி அலுவலர் கலாராணி மொத்தத்தில் அனைத்து நடைமுறையையும் மாற்றி குளறுபடி செய்து வருகிறார். தினம்தோறும் அலுவலகத்திற்கு வராத நிலையில் பல்வேறு பணிகள் நிலுவையில் இருக்கிறது. இந்நிலையில் ஊராட்சி செயலாளர்களுக்கும் ஒரே நாளில் சம்பளம் தர முடியாது என அலைபேசி மூலம் (குறுஞ் செய்தி) தகவல் அனுப்பியுள்ளார்.

அதன் படி ஜூன் 2ம் தேதி அன்றைக்கு கம்மாளப்பட்டி, அய்யம்பாளையம், ஜல்லிபட்டி பாப்பம்பட்டி, ஜே.கிருஷ்ணாபுரம் ஆகிய கிராம ஊராட்சி செயலாளர்களுக்கும், 3ம் தேதி தாளக்கரை, செஞ்சேரி புத்தூர், அப்பநாயக்கன்பட்டி, கள்ளப்பாளையம், போகம்பட்டி போன்ற ஊராட்சி செயலாளர்களுக்கும், 4ம் தேதி வடவேடம்பட்டி, குமாரபாளையம், மலைப்பாளையம், செலகரிச்சல் ஊராட்சி செயலாளர்களுக்கும் 5ம் தேதி வதம்பச்சேரி, பூரண்டபாளையம், இடையர்பாளையம், வாரப்பட்டி, வடவள்ளி ஊராட்சி செயலாளர்களுக்கும் 8ம் தேதி பச்சாபாளையம் கிராமத்திற்கும் 9ம் தேதி கள்ளப்பாளையம் கிராமத்திற்கும் என சம்பள வவுச்சர்கள் கையெழுத்திடப்படும் என வட்டார வளர்ச்சி அதிகாரி கலாராணி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குறிப்பிட்ட தேதிகளில் அந்தந்த ஊராட்சி செயலாளர்கள் சம்பள பட்டியல்கள் மற்றும் ஐடி, ஜிஎஸ்டி ஆகிய படிவங்களில் கையொப்பம் பெற்றுக்கொள்ள வேண்டும் என வாட்ஸ் அப் மூலம் தகவல் அனுப்பியுள்ளார். இந்த குறிப்புகளை அவரவர் டைரியில் குறித்து வைத்துக்கொண்டு அந்த அந்த நாட்களில் மட்டுமே வர வேண்டும். அன்றைய தினம் மட்டுமே கையொப்பம் பெற வேண்டும். மற்ற வவுச்சர்களுக்கு வேறு நாட்களில் கையெழுத்திட்டு தரப்படும் என அனைத்து ஊராட்சி செயலாளர்களுக்கும் வாட்சப் மூலம் தகவல் அனுப்பியுள்ளார். 1ம் தேதி

சம்பளம் வரும் என எதிர் பார்த்து இருந்த ஊராட்சி செயலாளர்கள், அலுவலக உதவியாளர்கள் வாட்டர் மேன் போன்ற பணியாளர்கள் இதனால் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர்.

இது தொடர்பாக விளக்கம் கேட்க அனைத்து ஊராட்சி செயலாளர்களும் சுல்தான் பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேற்று காலை முதல் வெகுநேரம் காத்திருந்தனர். நீண்ட நேரமாகியும் BDO கலாராணி வராதால் மாலை வரை காத்திருந்தனர். தொடர்ந்து, மாலை 4 மணியளவில் அலுவலகத்திற்கு வந்த வட்டார வளர்ச்சி அலுவலரை முற்றுகையிட்டு, ஊராட்சி செயலாளர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதைத்தொடர்ந்து அங்கு பரபரப்பான சூழல் நிலவியது. புதிய ஆட்சி அமைந்த முதல் மாதத்திலேயே ஒழுங்காக சம்பளம் தராமல் அலைக்கழிக்கும் வட்டார வளர்ச்சி அதிகாரி (BDO) செயலை கண்டிப்பதாக ஊராட்சி செயலர்கள் தெரிவித்துள்ளனர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம், சின்னம் பள்ளியில் பென்னாகரம் தெற்கு ஒன்றிய செயலாளர் என்.செல்வராஜ் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞரின் 103 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து 200 க்கும் மேற்பட்ட ஏழை எளியோருக்கு அசைவ உணவை முன்னாள் மாவட்ட செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன் வழங்கினார். உடன் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.